
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
பயிற்சி வினாத்தாள்
Practice Paper

# ඉන්දීය ඉතිහාසය
# History of India
# இந்திய வரலாறு





Question Paper – I, II வினாப்பத்திரம் – I, II

(மொழி மூலம் - தமிழ்)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education,Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

**கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**

| 25A | T | II |
|---|---|---|

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1206 வரை**

சுட்டெண் - ....................................

அறிவுறுத்தல்கள்:
- ❖ இவ்வினாத்தாள் பகுதி I இ பகுதி II ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இல் 1 – 40 வரையிலான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக
- ❖ பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- ❖ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.

- இல 01 தொடக்கம் 10 வரை தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று மாத்திரம் ஏதோ ஒரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது அந்த பொருந்தாத பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** **(1)** இந்துகுஷ் **(2)** சுலைமான் **(3)** கிரிதார் **(4)** காரகோரம் **(5)** நீலகிரி **(.....)**

**2.** **(1)** விக்ரமவர்ஷி **(2)** தசபூமி **(3)** சுஹ்ருத்லேகா **(4)** சூத்ராலங்காரம் **(5)** புத்த சரிதம் **(.....)**

**3.** **(1)** டொலவீர **(2)** கொத்திஜி **(3)** இந்திரபிரஸ்தம் **(4)** ஹரப்பா **(5)** சுக்தஜந்தூர் **(.....)**

**4.** **(1)** இந்திரன் **(2)** பிரஜாபதி **(3)** வருணன் **(4)** மாருதி **(5)** உஷா **(.....)**

**5.** **(1)** தௌலி **(2)** கிரிநார் **(3)** டில்லி தோப்ரா **(4)** நாசிக் **(5)** லும்பினி **(.....)**

**6.** **(1)** வேதாளபட்டர் **(2)** வரமிகிரர் **(3)** அமரசிங்கர் **(4)** தனவந்திரி **(5)** சூத்திரகர் **(.....)**

இரண்டாம் பக்கத்தைப் பார்க்க

**7.** **(1)** தேவகுப்தன் **(2)** தர்ம... **(3)** துருவ...
**(4)** இரண்டாம் நாகபட்டன் **(5)** மூன்றாம் கோவிந்தன் **(.....)**

**8.** **(1)** விஷ்ணு கோபன் **(2)** இரண்டாம் வரகுணவர்மன் **(3)** நரசிங்கவர்மன்
**(4)** முதலாம் மகேந்திரவர்மன் **(5)** இரண்டாம் நரசிங்கவர்மன் **(.....)**

**9.** **(1)** தெலுங்கு **(2)** மலையாளம் **(3)** கன்னடம்
**(4)** உருது **(5)** திராவிடம் **(.....)**

10. **(1)** மும்முடிச்சோழ **(2)** பாண்டிய குலாஷனி **(3)** கேரளாந்தகன்
**(4)** கலிகால **(5)** மதுரைகொண்ட **(.....)**

- இல 11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடி சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, **அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. **(1)** இண்டிகா - மெகஸ்தினிஸ்
**(2)** அர்த்த சாஸ்திரம் - கௌடில்யன்
**(3)** கிர்தார்ஜுனியம் - பாரவி
**(4)** இரகுவம்சம் - காளிதாசன்
**(5)** மகாபாரதம் - வால்மீகி **(.....)**

12. **(1)** யமுனா - மதுரா
**(2)** காவேரி - தஞ்சாவூர்
**(3)** மகாநதி - இந்திரபிரஸ்தம்
**(4)** சிந்து - மொஹஞ்சதாரோ
**(5)** கங்கை - கனோஜ் **(.....)**

**13.** **(1)** அல்லகப்பய - பூலி
**(2)** பிப்பலிவனம் - காலாமயன்
**(3)** மிதிலை - விதேகர்
**(4)** இராமகிராமம் - கோலியர்
**(5)** சுங்சுமாரகிரி - ஹக்கயர் **(.....)**

14. **(1)** சுங்கர் - மினென்டர்
**(2)** சாதவாகனர் - சீமுகன்
**(3)** சோழர் - விஜயாலயன்
**(4)** இராஷ்டகூடர் - தந்திதுர்கன்
**(5)** பாண்டியர் - கடுங்கோன் **(.....)**

15. **(1)** தஞ்சாவூர் பிருகதீஷ்வரர் ஆலயம் - சோழர்
(2) எல்லோரா கைலாசநாதர் ஆலயம் - இராஷ்டகூடர்
**(3)** பதாம் விஷ்ணு மகா ஆலயம் - சாளுக்கியர்
**(4)** மகாவலிபுரம் கரையோர ஆலயம் - பல்லவர்

**(5)** வேலூர் சென்னகேஷவர் ஆலயம் -பாண்டியர் (.....)

- 16 -20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலு[illegible] பெயர்கள் / கூற்றுக்கள்/திததிகளின் [illegible] என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நி[illegible] ரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுக்கள்/ தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையல தொடர்பு பட்டவை. ஆனால் அவை சரயான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியான ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சுரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.



மூன்றாம் பக்கத்தைப் பார்க்க

16. X Y

| X | Y |
|---|---|
| (i) பித்தரி | A அசோகன் |
| (ii) ஜுனாகாட் | B ஸ்கந்த குப்தன் |
| (iii) மஸ்கி | C முதலாம் இராஜேந்திரன் |
| (iv) நானாகாத் | D ருத்ரதாமன் |
| (v) திருவாலங்காடு | E நாகனிகா |

**(1) ACBDE (2) ABEDC (3) BDAEC (4) BADCE (5) CBDAE** (.....)

17. X Y

| X | Y |
|---|---|
| (i) சங்கிராத்ரி | A பொலிஸ் அதிகாரி |
| (ii) உக்கிரர் | B வேட்டையின் போது அரசனுக்கு உதவுபவர் |
| (iii) பாகதுகர் | C பொருளாளர் |
| (iv) அக்ஷவாசர் | D வருவாய் அதிகாரி |
| (v) கொவிகர்த்தன | E சூதாட்ட நிர்வாகி |

**(1) ACDBE (2) CADEB (3) CBADE (4) DCBAE (5) ECBAD** (.....)

18. X Y

| X | Y |
|---|---|
| (i) சுவர்ணபூமி | A மகாதேவ தேரர் |
| (ii) காஷ்மீர் - காந்தாரம் | B மஜ்ஜிம தேரர் |
| (iii) மகீஷமண்டலம் | C சோன – உத்தர தேரர் |
| (iv) தம்பபண்ணி | D மகிந்த தேரர் |
| (v) பனி பிரதேசம் | E மஜ்ஜந்திக தேரர் |

**(1) CEADB (2) CABDE (3) DAEBC (4) EABDC (5) EBADC** (.....)

19. X Y

| X | Y |
|---|---|
| (i) பிருஹத்ரத் | A பல்லவ |
| (ii) கௌதம புத்ர சதகர்னி | B சோழ |
| (iii) சிங்க விஷ்ணு | C சாத வாகன |
| (iv) இரண்டாம் புலிகேசி | D மௌரிய |
| (v) முதலாம் பராந்தகன் | E சாளுக்கிய |

**(1) ACBDE (2) BAEDC (3) CBEDA (4) DCAEB (5) EDCBA** (.....)

20. X Y

| X | Y |
|---|---|
| (i) காஞ்சி | A தனஞ்சயன் |
| (ii) ஏரண்டபல்ல | B வியாக்ரராஜன் |
| (iii) மகா காந்தாரம் | C தமனன் |
| (iv) குஸ்தலபுரம் | D மகேந்திரன் |
| (v) கோசலம் | E விஷ்ணுகோபன் |

(1) ABCDE (2) BCDAE (3) CABED (4) DACBE (5) ECBAD
(.....)



நான்காம் பக்கத்தைப் பார்க்க

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக் ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தரைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. ஆதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

21. **மகதம்**

(1) தலைநகரங்கள் மூன்று தடவைகள் மாற்றமடைந்துள்ளன
(2) மகதத்தின் எழுச்சிக்கு அடித்தளமிட்ட முதல் ஆட்சியாளன் பிம்பிசாரன் ஆவான்.
(3) 16 பெரும் குடியேற்றங்களுள் மகா ஜனபதமாக விளங்கியது
(4) மகதத்தை மையமாகக் கொண்டு இந்தியாவின் முதல் பேரரசானது மௌரியர்களால் கட்டியெழுப்பப்பட்டது
(5) அஜாசத்ரு மன்னன் பாடலிபுத்திரத்தை மகதத்தின் தலைநகராக மாற்றினான். (.....)

22. **சமண சமயம்**

(1) மகா வீரர் இதன் ஸ்தாபகர் ஆவார்.
(2) திகாம்பரம், ஸ்வேதாம்பரம் என இரு பிரிவுகள் காணப்பட்டன.
(3) அகிம்சை சமணத்தின் பிரதான கொள்கையாகும்.
(4) கி.பி. 5ஆம் நூற்றாண்டில் குஜராத்தில் சமண பேரவையொன்று நடைபெற்றது.
(5) காலாசோக மன்னன் சமண சமயத்தின் பிரதான கர்த்தாவாக விளங்கினான். (.....)

23. **குஷாணர்கள்**

(1) கனிஷ்கன் குஷாண வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளன் ஆவான்.
(2) சீன துர்கிஸ்தான் பிரதேசம் அவர்களது பூர்வபூமி ஆகும்.
(3) குஷாணர்கள் யூச்சி எனும் இடையர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
(4) அவர்கள் இந்திய கலாசாரத்தை இந்தியாவிற்கு வெளியே பரப்புவதற்கு பங்களிப்புச் செய்துள்ளனர்.
(5) சர்வலோக ஈஸ்வர, மகேஷ்வர போன்ற விருதுப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர். (.....)

24. **ஹர்ஷவர்தன மன்னன்**

(1) ஹர்ஷவர்தன மன்னன் மகத இராஜன் எனும் விருதுநாமத்தைப் பெற்றிருந்தான்.
(2) இவன் மௌகரி வம்சத்தைச் சேர்ந்தவன் ஆவான்.
(3) ஹியூங்சாங்கின் அறிக்கையில் ஹர்ஷவர்தனன் பற்றிய பல தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(4) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
(5) கனோஜ் மற்றும் பிரயாகத்தில் சமயப்பேரவை நடைபெற நடவடிக்கை மேற்கொண்டான்.
(.....)

25. **அரேபிய துருக்கி படையெடுப்பு**

(1) மதீனா காலிக் வம்சத்தின் இரண்டாம் உமர் காலிப் மன்னனது காலத்தில் இந்தியா மீதான முதல் படையெடுப்பு இடம்பெற்றது.
(2) இவர்களது ஆரம்ப படையெடுப்பின் நோக்கம் இந்தியாவின் செல்வங்களைளப் பெற்றுக் கொள்வதாகும்.
(3) கஜினி முகம்மது தனது 25ஆவது வயதிற்குள் பதினேழு தடவைகள் இந்தியாவை ஆக்கிரமித்துள்ளான்.

**(4)** கி.பி. 10ஆம் நூற்றாண்டில் சபுக்திஜின் தக்கிணம் வரையில் வெற்றிகரமாக ஆக்கிரமிப்பினை முன்னெடுத்தான்.

**(5)** கி.பி. 1206 இல் டில்லியை மையமாகக் கொண்டு குதுபுதீன் ஐபெக்கினால் அடிமை அரச வம்சம் ஆரம்பமானது.

**(.....)**

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வின - 4 - ஒவ்வொன்றுக்கும் **(A),(B),(C),(** ஐந்தாம் பக்கத்தைப் பார்க்க தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் அல்லது பல சரியான விடையா அல்லது விடைகளைத் தெரிவு செய்து

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ................................................. **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின்................................................. **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின்................................................. **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின்................................................. **4** எனவும்

**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ....... 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**26. ஹரப்பா நாகரிகம்**

**(A)** 20 லட்சம் சதுர மைல்கள் அளவில் பரவியிருந்த நாகரிகமொன்றாகும்.

**(B)** இந்நாகரிகத்திற்கான ஆரம்ப அடையாளங்கள் சால்ஸ் மாசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**(C)** இந்நாகரிகவாசிகள் பாருகச்ச துறைமுகத்தினூடாக வெளியுலகுடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர்.

**(D)** வடமேற்கினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகள் காரணமாக இந்நாகரிகம் வீழ்ச்சி கண்டது.

**(.....)**

**27. நந்த வம்சம்**

**(A)** ஆரம்ப ஆட்சியாளன் மகா பத்மநந்தன் ஆவான்.

**(B)** நந்த வம்சத்தில் பன்னிருவர் ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

**(C)** நந்த வம்சம் மகதத்தில் ஆட்சியில் இருந்தபோது பேரரசன் அலெக்சாண்டரின் வருகை இடம்பெற்றுள்ளது.

**(D)** நந்த வம்ச மன்னர்கள் மனித நேய ஆட்சி முறையொன்றினை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது. **(.....)**

**28. காந்தாரக் கலை**

**(A)** குஷாணர் காலத்தில் இக்கலை வளர்ச்சியுற்றது.

**(B)** தேசிய பண்புகளை வெளிப்படுத்தும் கலையொன்றாகும்.

**(C)** தெனிந்தியாவின் ஆந்திர பிரதேசத்தை மையமாகக் கொண்டு இக்கலை வளர்ச்சியுற்றுள்ளது.

**(D)** காந்தாரக் கலையில் புத்த பெருமானின் ஆன்மீகப் பண்புகளை வெளிப்படுத்தலுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. **(.....)**

**29. அலகாபாத் கல்வெட்டு**

**(A)** அலகாபாத் கல்வெட்டில் இரண்டாம் சந்திரகுப்தன் நூற்றுக்கணக்கான போர்களின் வீரனாகக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

**(B)** உரைநடை மற்றும் கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ளது.

**(C)** சமுத்திரகுப்த மன்னனின் திக்விஜயக் கொள்கை பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் பிரதான மூலாதாரமொன்றாகும்.

**(D)** பாணபட்டரினால் எழுதப்பட்டுள்ளது. **(.....)**

**30. முத்தரப்பு மோதல்**



ஆறாம் பக்கத்தைப் பார்க்க

**(A)** கன்னியாகுமரி முனைவுப் பிரதேசத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும்பொருட்டு [illegible] இடம்பெற்றுள்ளது.

**(B)** பாலர், இராஷ்டகூடர், பூஷ்யபூதி போன்ற அரச வம்சங்களுக்கிடையே இம்மோதல் இடம்பெற்றுள்ளது.

**(C)** ஹர்ஷவர்தன மன்னனின் மரணத்தின் பின்னர் கனோஜில் அதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு மூன்று அரச வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலொன்றாகும்.

**(D)** மூன்றாம் கோவிந்தன் முத்தரப்பு மோதலுடன் தொடர்புடயை இராஷ்டகூட ஆட்சியாளன் ஆவான். **(.....)**

- 31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

**31.** இந்தியாவின் முதல் சமஸ்கிருத சாசனமாகக் கருதப்படுவது,

**(1)** புரோச்சிக் கல்வெட்டு **(2)** ஜுனாகாட் கல்வெட்டு **(3)** அய்கோல் கல்வெட்டு

**(4)** அத்திக்கும்பா கல்வெட்டு **(5)** சாஞ்சிக் கல்வெட்டு **(.....)**

**32.** தட்சிணாபதி எனும் விருது நாமத்தைப் பயன்படுத்திய மன்னன்,

**(1)** முதலாம் சதகர்ணி **(2)** இரண்டாம் புலிகேசி **(3)** சமுத்திரகுப்தன்

**(4)** கௌதம புத்ர சதகர்ணி **(5)** ஸ்கந்த வர்மன் **(.....)**

**33.** பாண்டியர்களின் தலைநகரம்,

**(1)** மதுரை **(2)** மான்யகேதம் **(3)** பதாம்

**(4)** காஞ்சி **(5)** தஞ்சாவூர் **(.....)**

**34.** பிராமணர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட பழமைவாய்ந்த குகை

**(1)** பராபர் மலையடிவாரக் குகை **(2)** அஜந்தா குகை **(3)** அவுரங்கபாத் குகை

**(4)** கார்லே குகை **(5)** உதயகிரி குகை **(.....)**

**35.** கோசல மன்னனின் புதல்வியை மணந்து கொண்டதன் காரணமாக பிம்பிசார மன்னனுக்கு நன்கொடையாகக் கிடைத்த ஜனபதம்,

**(1)** பாஞ்சாலம் **(2)** அங்கம் **(3)** மல்ல

**(4)** காசி **(5)** குரு **(.....)**

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1,2,3,4,5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |



ஏழாம் பக்கத்தைப் பார்க்க

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36** | விந்திய மலைத் தொடரானது இந்தியாவை வடக்கு மற்றும் கிழக்கு என பிரிக்கும் பிரதான புவியியல் அம்சமொன்றாகும். | பல்காட் கணவாய் விந்திய மறறும சத்புத்ரா மலைத்தொடர்களுக்கிடையில் அமைந்துள்ளது. | (.....) |
| **37** | இந்திய பௌத்த கல்வியின் மத்திய நிலையமொன்றாக நாலந்தா பல்கலைக்கழகம் விளங்கியது. | விக்ரமஷீலா பல்கலைக்கழகமானது தர்மபால மன்னனின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | (.....) |
| **38** | இந்தோ கிரேக்கர்கள் கடல்மார்க்கமாக தாமிரலிப்தி துறைமுகத்தினூடாக இந்தியாவிற்கு வருகை தந்துள்ளனர். | சமஸ்கிருத மொழியை இந்தியாவிற்கு அறிமுகஞ் செய்தோர் இந்தோ – கிரேக்கர் ஆவர். | (.....) |
| **39** | இயற்கை பாறைகளைப் பயன்படுத்தி குகைகளை நிர்மாணிக்கும் மரபு மௌரிய யுகத்தில் ஆரம்பமானது. | பராபர், நாகர்ஜுனா மற்றும் சீதாதர்கி போன்ற மலைகளில் மௌரிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட குகைகளைக் காண முடியும். | (.....) |
| **40** | ஜடாவர்ம சுந்தர பாண்டிய மன்னன் பாண்டிய பேரரசின் முதல் சிரேஷ்ட ஆட்சியாளன் ஆவான். | பாண்டிய அரசு தென்னிந்தியாவின் பிரபல அரசொன்றாக கி.பி. 6ஆம் நூற்றாண்டின் அரையிறுதியில் எழுச்சியுற்றது. | (.....) |

* * *

**கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**

**25A | T | II**

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1206 வரை**

**அறிவுறுத்தல்கள்**
- **நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- **பகுதி II ஆனது A,B,C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி A யின் வினா கட்டாயமானது.**
- **பகுதி B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடை தருக**

**(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இந்திய புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)**

## பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள இந்திய புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) கோதாவரி | (ii) அஜந்தா | (iii) ஆரவல்லி |
| (iv) சியல்கொட் | (v) கைபர் | (vi) லோத்தல் |
| (vii) அலகாபாத் | (viii) தஞ்சாவூர் | (ix) நீலகிரி |
| (x) தாமிரலிப்தி | (xi) மாமல்லபுரம் | (xii) சம்பாள் |

(சரியாக குறித்துப் பெயரிடுவதற்கு ஒரு புள்ளி வீதம்)

## பகுதி B

2. சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட சமூக, பொருளாதார, கலாசார நிலமையினை ஆராய்க.
(16 புள்ளிகள்)

3. பிரம்ம வர்தனத்திலிருந்து ஆரிய வர்தனத்திற்கு குடிபெயர்கையில் சமய சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவுபடுத்துக.
(16 புள்ளிகள்)

**4. "இந்தியாவின் முதல் பேரரசு மௌரியர்களால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது."**

i. மௌரிய அரச சபையில் இருந்த கிரேக்கத் தூதுவர் ஒருவரைப் பெயரிடுக.
(01 புள்ளி)

ii. மௌரிய நிர்வாகம் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

iii. மௌரியப் பேரரசைக் கட்டியெழுப்புவதில் சந்திரகுப்த மௌரியனின் பங்களிப்பினை ஆராய்க.

(04 புள்ளிகள்)

iv. மௌரியப் பேரரசினது நிர்வாகக் கட்டமைப்பின் பிரதான அம்சங்களை ஆராய்க.
(09 புள்ளிகள்)



ஒன்பதாம் பக்கத்தைப் பார்க்க

5. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பறறு சறு குறபபு எழுதுக.

**(i)** தக்கண மேட்டு நிலம்
**(ii)** பிந்திய வேதகால அரசியல் நிலை
**(iii)** அசோக தர்மம்
**(iv)** இந்தோ கிரேக்கர்

(புள்ளிகள் **08 x 2 = 16 )**

## பகுதி C

**6. “இந்திய அரசியல் வரலாற்றில் முக்கிய காலகட்டமொன்றாக குப்தர் காலம் விளங்குகின்றது.”**

**(i)** குப்த பேரரசின் தலைநகரம் எது?
(01 புள்ளி)

**(ii)** குப்த ஆட்சியாளர்கள் பயன்படுத்திய விருதுப் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

**(iii)** குப்த அரசை பேரரசொன்றாக மாற்றுவதில் சமுத்திர குப்த மன்னனின் பங்களிப்பினை ஆராய்க.
(04 புள்ளிகள்)

**(iv)** குப்த பேரரசின் வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் பற்றி ஆராய்க.
(09 புள்ளிகள்)

7. சோழர் கால பொருளாதார, சமூக, கலாசார நிலமை பற்றி ஆராய்க.
(16 புள்ளிகள்)

8. பாலர் அரச வம்சத்தின் முக்கியத்துவம் பற்றி கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் ஆராய்க.

**(i)** அரசியல் அதிகார வளர்ச்சி
**(ii)** பௌத்த சமயத்திற்கு வழங்கிய பங்களிப்பு
**(iii)** கல்வி மற்றும் இலக்கிய வளர்ச்சி

(16 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

**(i)** சாதவாகனர்களின் கலாசாரப் பணிகள்
**(ii)** கணிஷ்க மன்னன்
**(iii)** சாளுக்கிய அரச வம்சம்
**(iv)** கூர்ச்சரர் பிரதிபார்

(புள்ளிகள் **08 x 2 = 16 )**

* * *

பத்தாம் பக்கத்தைப் பார்க்க

**25A | T | II**

**கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026**

**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026**

**General Certificate of Education (Adv. Level ) Examination - 2026**

| | |
|---|---|
| ඉන්දීය ඉතිහාසය | II (II කොටස) |
| இந்திய வரலாறு | II (பகுதி II) |
| History of India | II (Part II) |

வினா எண் - ........

சுட்டெண் - ....................................

